இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,489 — FEBRUARY 16, 1912.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[By-laws and Regulations of the Galle Municipal Water Service.]

பெரிய பிரித்தானும் அயர்லந்துமாகிய ஐக்கிய இராச்சியத்துக்கும் கடலுக்கப்பாலுள்ள பிரிட்டிஷ் அதிபத்திய நாடுகளுக்கும் இராசாவும் சமய பரிபாலகருமாகிய மகத்துவ நாயக ஐந்தாம் ஜோர்ச் அவர்களின் நாமத்தினாலே :

மகா மேன்மைபொருந்திய சென் மைக்கேல் அன் சென் ஜோர்ஜின் வருசயின் கிராண்டு குரோஸ் நயிட் பட்ட வர்த்தனரும் இலங்கைக்கும் அதைச்சேர்ந்த நாடுகளுக்கும் தேசாதிபதியும் சேனாதிபதியும் ஆகிய உத்தமனார் சேர் ஹென்றி எட்வட் மக்கலம் அவர்கள் செய்யும்

## விளம்பரம்.

ஹென்றி மக்கலம்,

1910 ம் ஆண்டின் 6 ம் இலக்க நகரசங்க கட்டளைச்சட்டம் 109 (1) ம் வகுப்பின் நியமனப்படி சொல்லிய கட்டளைச் சட்டத்தின் சம்பவங்களை நடத்துவதற்காக இடைக்கட்டளைச்சட்டத்தை நகரசங்கத்தார் தடவைக்குத்தடவை உண்டு பண்ண, உண்டுபண்ணியவையை அளிக்க அல்லது வேறுபடுத்தவேண்டியதாலும் இடைக்கட்டளைச்சட்டத்தில் அபராதங்கள் விதிக்கப்பட்டிருப்பதினாலும் ஒரு குற்றச்சாட்டுக்கு ரூபா 50 துக்கதிகப்படாத அபராதமும், குற்றம் தொடராகச் செய்தால் செய்தநாள்மட்டிலும் ஒவ்வொருநாளைக்கு ரூபா 25 அங்கத்தவர் எழுதி அறிவித்தபின் செய்தவர்களுக்கு விதிக்கப்படுவதினாலும்.

முன் சொல்லிய கட்டளைச்சட்டத்தின் 109 ம் வகுப்பின் (3) ம் இடைவகுப்பின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் மந்திராலோசனைச் சங்கத்தவர்களின் அனுமதிப்படி தீர்மானிக்கும்வரையில் அடிக்கட்டளைச்சட்டம், அளித்தல், திருத்துதல் வேறுபடுத்தல் ஆகியவைகள் திருத்தியடையமாட்டாமையினாலும் அவ்விதம் தீர்மானித்தபின்னர் 109 ம் வகுப்பின் (4) ம் இடைவகுப்பின் பிரகாரம் இங்கிலிசு, சிங்களம், தமிள் பாசைகளினால் இராசாங்க "கசட் பத்திரிகை" யில் பகிரங்கப் படுத்தியபின்னர் சொல்லிய கட்டளைச்சட்டம் நீதமாகவும் வலிவாகவும் பிரயோசனப்படுவதாகவும் இக்கட்டளைச்சட்டத்துக்கும் சேர்ந்துவிடும்.

1910 ம் ஆண்டின் 6 மிலக்கக் கட்டளைச்சட்டத்தில் 110 வது வகுப்பின் (4) ம் இடைக்கட்டளைப்பிரகாரம் இதனோடிணைத்திருக்கும் இடாப்பின் பிரகாரம் காலி நகரசங்கத்தார் உண்டுபண்ணிய பைலோ சட்டத்தை தேசாதிபதி மந்திராலோசனைச்சங்கத்தில் 109 மிலக்க (3) இடைவகுப்புப்படி தீர்மானிக்கப்பட்டது.

ஆகையால் தேசாதிபதியாகிய நாம் இத்தோடிணைத்திருக்கும் இடாப்பில் குறிக்கப்பட்டிருக்கும் (பைலோ) கட்டளையை இப்போது பிரசித்தப்படுத்துகின்றோம் என்றும் அதை வழங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

எங்கள் ஆண்டவரின் வருசம் 1912 ம் ஆண்டு தைமாதம் 22 ந் திகதி இலங்கை தீவில் கொழும்பில்வைத்து கொடுககப்பட்டது.

உத்தமனார் கட்டளைப்படி,

ஹியூ. கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறுத்தார்.

இராசாவை தேவன் ரட்சித்தருள்க.

---

## இடாப்பு.

### காலி நகரசங்க சலம் கொடுப்பதைப்பத்திய பைலோ கட்டளைச்சட்டமும் விளம்பரமும்.

1. 1891 ம் வருச காலித் தண்ணீரைப்பத்திய கட்டளைச்சட்டப் பிரகாரம் நகரசங்கத்தாருக்கு கிடைத்திருக்கிற தத்துவப்பிரகாரம் வாடகை ஏற்பாடாக்கவும் அறவிடவும் இக்கட்டளைச்சட்டப்பிரகாரம் அறவிடக்கூடிய பணத்தை 1910 ம் ஆண்டின் நகிரசங்க சட்டப்படி அல்லது இப்போதைக்குள்ள அல்லது மேலைக்கு உண்டுபண்ணப்படும் சட்டப்பிரகாரம் அறவிடப்படும். *சலவரி அறவிடும் முறை.*

2. காரியப்பிரகாரம் கீள்காட்டப்படும் தத்துவத்தையும் செய்கைக்காகியவர்களையும் நகரசங்கத்தால் கற்பிக்கப்படும். சொல்லப்பட்ட தத்துவமும் அவர்மேல் விதிக்கப்பட்ட செய்கையும் நிறைவேத்துதலில் அவர் நகரசங்க அங்கத்தவரின் நியமனப்படியும் இலங்கை பினல்கோட்டுச் சட்டப்படியும் 1910 ம் ஆறு 6 மிலக்ககட்டளை 68 ம் பிரிவின் பிரகாரம் இராசாங்க பணிவிடைக்காரராக ஒப்புக் கொள்ளப்படும். *சலவேலை காரியஸ்தரை கற்பிக்க நகரசங்கத்தவருக்குள்ள தத்துவம்.*

3. அக்காரியஸ்தருககு சங்கத்தாரால் சரியெனக்காணும் சம்பளம் அல்லது கொடுமானம் கொடுக்கப்படும். *சமபளம் அல்லது கொடுமானம்.*

4. தண்ணீர் வாடகை அறவிடுதலினும் தண்ணீர் கொடுப்பதிலினும் தண்ணீர் வைப்பதிலினும் வரப்படும் சகல சிலவும், சம்பளம், கூலி, கொடுமானம் புண்ணியசம்பளம் ஆகியவை அவ்வகுப்பால் கிடைக்கும் வருமதியால் சங்கத்துபணத்தால் கொடுக்கப்படும். *சலவேலை நடத்துதலில் கொடுக்கும் சிலவு.*

*பொலிஸ் எல்லைக்குள் சலம் கொடுப்பதைப்பத்திய சங்கத்தாரின் செய்கை.*

5. காலி நகரசங்கத்துள் திருத்தப்பட்ட பொலிஸ் எல்லைக்குள் குடிப்புக்குத் தண்ணீர் கொடுக்கப்படும், இதற்காக சங்கத்தவர் குளா, தாங்கி, வடிப்பவை, வாய்க்கால், தடாகங்களாகியவைகள் உண்டுபண்ணப்படும், இன்னும் வீதிகளில் ஜலத்தூண்கள், நீர்சுரம், தடாகம், போம்ப ஆகியவைகள் அவ்வெல்லைக்குள்ளிருப்பவர்களின் போஜன உபயோகத்துக்காகச் செய்யப்படும். கொடுக்கப்படும் தண்ணீர் என்நேரமும் மனுத உபயோகத்துக்காகிய சுத்தமாயும் குறைவில்லா வருசமுடியும்வரையும் தண்ணீர் கொடுக்கும்படிக்காகிய ஏதுக்கள்பண்ணுவது சங்கத்தவர்களின் கடமையாகும்.

*சலவேலை சங்கத்தவருக்குடையதென்பது.*

6. சகல பொதுதாங்கி, தடாகம், பொய்லர், நீர்தூண், குமுளி, வாய்க்கால், கிணறு, குளா ஆகியவைகள் இக்கட்டளைச்சட்டம் நியமனத்துக்கு வரும்போது உள்ளவைகளும் மேலைக்கு உண்டுபண்ணும்போதும் கட்டப்படும் தண்ணீரைப்பத்தியவைகள் சகலதும் சங்கத்துக்குடையதாகும்.

*ராசாங்கத்தவருக்குசலம்கொடுப்பது.*

7. காலி நகர பொலிஸ் எல்லைக்குள் இலங்கை புகைரதவீதி உபயோகத்துக்காக சிலவு இல்லாமல் தண்ணீர் கொடுக்கப்படும், தேசாதிபதியவர்களால் எழுதி நியமனம்பண்ணும் தானங்களுக்கு.

*சொந்தப் பாவிப்புக்கு சலம்கொடுப்பதைப்பத்திய கருமங்களுக்கு சங்கத்தவருக்குள்ள தத்துவம்.*

8. வீடு உடந்தைக்காறன் அல்லது குடியிருப்பவன் போஜன விசயத்துக்காய் சொந்த தண்ணீர் கேள்ப்பதால் சங்கத்தாரால் அப்பிரமாணத்துக்கு தகுதியெனக் கொடுக்கப்படும் வீதிக்குளாவிலிருந்து சேர்த்து வீதிஎல்லைவரையில் குளாவிட்டு லேசாக தண்ணீர்எடுக்கும் வீட்டை தொடுக்கப்படும் எங்கிலும் தொடுப்பதுக்காகிய சகல சிலவும் தொடுத்துவைத்துக்கொள்ளும் குளாக்களும் வீடுடந்தைக் காறன் அல்லது குடியிருப்பவன் ஒத்துக்கொள்ளவேணும்.

சொல்லப்பட்ட தொடுப்புபண்ணுதல் நகரசங்க சுபரின்ரன்டனின் பராமரிப்புப்படி அந்த வேலைக் காறரால் கேள்விக்காறனின் சிலவால் செய்யவேணும். வேலை துவர்க்கமாகுமுன் வீதிக்குளாவிலிருந்து தண்ணீர் எடுக்கும் வீட்டு எல்லைக்கிடையிலுள்ள விடுதலுக்கு நியமனப்படுத்தும் சிலவை வேலைதுவங்கமுன் நகரசங்கப்பணத்துக்கு ஒப்புவித்தால் விடைகொடுக்கப்படும்.

அதெர்க்காகிய குளாக்களும் புடிப்புகளும் நகரசங்க அங்கத்தவரால் தத்துவம்பெற்றவராலிட்டிபெலப்படுத்தப்படும் யெங்கிலும் வேலை சுப்ரின்டன்டன் சரியென ஒப்புக்கொள்ளும் வரையில் பாவினை பண்ணக் கூடாது.

*வீதிக்குளாவுடன் தொடுக்காமல் செய்யப்படும் கருமங்கள்.*

9. வீதிக்குளாக்கும் வீதி எல்லைக்கிடையில் தண்ணீர் கேட்டிருக்கும் தலத்துக்கும் லேசாக தொடுக்கக்கூடிய சேர்மானம், மலைக்கு புதுப்பித்தல், நெடுப்பித்தல் இத்துடன் அணைத்திருக்கும் இடாப்பில் காணும் பிரகாரமும் மந்திராலோசனைச் சங்கத்தவர்களின் அனுமதியுடன் தேசாதிபதியவர்களின் நியமனப்படி காலத்துக்குக்காலம் நகரசங்கத்தவர்கள் உண்டுபண்ணும் கட்டளைச்சட்டப் பிரகாரம் வீடுடையவர் அல்லது குடியிருப்பவர் சொந்த கொடுத்தல் அங்கத்தவர் கட்டளைப்படி அவ்வேலை திருத்துதல் நீட்டுதல் வேறுபடுத்தல்களை அங்கத்தவரால் செலுத்தப்படும். அதர்க்காகிய சிலவு அங்கத்தவர் உறுதிபண்ணியபோது உடந்தக்காறன் அல்லது அனுபோவிப்பவன்மேல் விதிக்கப்படும், அந்த வரியை 1910 ம் ௵ நகரசங்கக் கட்டளைச்சட்டப் பிரகாரமும் நடைபெறும் அல்லது மேலைக்கு திருத்தப்படும் சட்டப்படி சங்கத்தவர் நியமனப்படி அறவிடப்படும்.

*சலவேலை நடத்தகை.*

10. எல்லாப் பிரசித்த தாங்கி, தடாகம், பொய்லர், கிணறு, லம்பிக்கை, பைய்ப், போம்பா யத்தும் தண்ணீர் கொடுக்கப்படும் வகைகள் இக்கட்டளைச்சட்டத்தால் சங்கத்துக்கு உடையதாகுவதல்லாமலும் மேலைக்கு சங்கத்தால் தண்ணீர் கொடுப்பதுக்காக உண்டுபண்ணப்படுவதுகளுமாகும்.

*சலம்வடிப்பதர்க்கும் மத்தும்வேலைகளை உண்டுபண்ணுவதற்கும் சங்கத்தவருக்குள்ள தத்துவம்.*

11. காலிப் பொலிஸ் எல்லைக்குள் குடியிருப்பவர்களின் உபயோகத்துக்காய் சங்கத்தவர்கள் தடவைக்குத்தடவை தண்ணீர் வடிக்கும் வகை, தாங்கி நீர்சுரம் ஆகிய சுத்ததண்ணீர் கொடுப்பதுக்காகியவைகள் வைப்பதுக்கு சங்கத்தவர்களுக்கு தத்துவமிருக்கின்றது.

*வீதி ஆகியவைகளை கிண்டுவதற்கும் சொந்தசலம் கொடுப்பதுக்கும் சங்கத்தவருக்கு உண்டாகிய தத்துவம்.*

12. தண்ணீர் கொடுப்பதுக்காக குளா வைக்கும்போது சங்கத்தவர்களுக்கு தேவைகண்டால் அக்குளா வீதி அல்லது வீதிக்கென எண்ணியிருக்குமிட மல்லது சரிபண்ணியிருக்கு மிடத்தால் அல்லது குறுக்கில் அல்லது அண்டத்தால் அல்லது கட்டுமானங்கள், நிலஅறை, போக்குக்குள்ளாலாவது, எவ்விடத்துக்குள்ளாலாவது நடுகாலாவது அண்டையாலாவது போடுவதுக்கு கூடியதாகயிருக்கும் இவ்விதக் கருமங்களில் சங்கத்தார் இவ்விதம் செய்யப்படு மென்பதை காணி அல்லது வீடுடையவர்களுக்கு அறிவித்தல் கொடுப்பார்கள். இவ்வகுப்பாலுள்ள தத்துவப்பிரகாரம் வேலைசெய்து முடிவில் உடந்தைக்காரருக்கு அதினால் சேதம் உண்டாகியதெனக் கண்டால் நீதியான சேதம் கொடுக்கப்படும்.

*சிலவிடு முதல் கொடுப்பது சலவேருமதியாகிய சங்கத்துக்குடைய முதலாமென்பது.*

13. காலித் தண்ணீர் வேலையைப்பற்றி இப்போதைக்காகிய சிலவு முழுமையும் நகரசங்க பணத்தாலாகியது, அவையின் வரி வாடகை சங்கத்துக்குடைய சொத்துகளுக்கு அறவிடப்படும், இந்த குறிக்கப்படும் சங்கதி 1910 ம் ௵ 6 மிலக்கச் சட்டத்துக்காவது மேலைக்கு திருத்தப்படும் கட்டளைச்சட்டத்துக்கும் வேத்துமைப்படாது.

*தோப்புகள் வீடுகள் காணிகளுக்கு வாடகை கொடாவிடில் சங்கத்தவருக்கு விடுதலைபண்ண உள்ள தத்துவம்.*

14. மந்திராலோசனை சங்கத்தவர்களின் அனுமதிப்படி தேசாதிபதியவர்களின் கட்டளைப்படி தடவைக்குத்தடவை இராசாங்க "கசட்" பத்திரிகையில் பிரசித்தம் பண்ணியபின் சங்கத்தவர்களால் நகரசங்க எல்லையில் ஒரு பாகத்தை அல்லது பாகத்து பிரிவை வாடகை கொடாவிடக் கூடியது. இந்தப் பிரியமில்லாமலும் எந்த வீடு, இடம் அல்லது குடியிருப்புத் தலத்துக்கும் கூடிய லேசில் தண்ணீர் கொடுக்கக்கூடாதபோனால் காலி தண்ணீர்வேலை கட்டளைச்சட்டத்தின் அல்லது பிறிவின் தண்ணீர் கொடுப்பதைப்பற்றி கொடுக்கவேண்டிய வாடகைப் பிரமானத்துக்கு குறைவுபண்ண சங்கத்தவர்களுக்கு தத்துவமிருக்கிறது மல்லாமல் அவ்வித மறிவித்தலின் காலத்துக்குக்காலம் வேறுபடுத்துதலை அவளப்பம்பண்ணவும் கூடியது.

*போசனவிசயத்துக்கலாத கருமங்களுக்கு கொடுக்கும் சலத்துக்கு அறவிடும் வாடகை.*

15. போஜனவகைகளுக்கல்லாத தேவைகளுக்கு கொடுக்கும் தண்ணீருக்கு அறவிடும் முறைமை:

(1) முழுமையும் அல்லது ஒருபங்கு பாவிக்குமிடம்—

(a) ஏதும் வியாபாரம் அல்லது தொழில் செய்யும் தலங்களுக்கு எடுக்கும் தண்ணீருக்கு 1,000 கலத்துக்கு ரூபாய் 1.

(b) ஓட்டல் அல்லது சொந்தபோஜனசாலை குடியிருப்புத்தலத்துக்கு 1,000 கலத்துக்கு ரூபா 1.

(c) பிரசித்த குளிக்கும் தலத்துக்கு 1,000 கலத்துக்கு சதம் 50.

(d) விப்பனவுக்காக அல்லது கூலிக்குக் கொடுப்பதுக்காக வைத்திருக்கும் குதிரைகள், மாடுகள் கரத்தைகள் வைத்திருக்கும் தலத்துக்கு 1,000 கலத்துக்கு சதம் 50.

(2) இதின்கீள் காட்டும் தண்ணீர் பாவினைபண்ணும் தலங்களுக்கு:—

(a) நின்றுகுளிக்கும் தலத்துக்கு 1,000 கலத்துக்கு சதம் 50.

(b) ஏதும்தொளிலைப்பத்தி அல்லாமல் பாவினைபண்ணும் நீரூற்று சலசலன சூஸ்திரங்களுக்கு 1,000 கலத்துக்கு சதம் 50.

(c) தொப்புகளுக்கு அல்லது முத்தங்களுக்கு 1,000 கலத்துக்கு சதம் 50.

(d) கட்டுமானங்களுக்கு பாதை சரிபண்ணுதலுக்கு பாதை திருத்துதலுக்கு 1,000 கலத்துக்கு ரூபாய் 1.

(e) தண்ணீர் கப்பலுக்கு ஏத்துமதிக்கு 1,000 கலத்துக்கு ரூபாய் 3·50.

*சொந்தப் பாவிப்புக்கு சலம் கொடுப்பதுக்கு சங்கத்தவருக்கு கூடியதன்மை.*

16. வீடுடையவன் அல்லது குடியிருப்பவனின் கேள்விப்படி போஜன விசயத்துக்காய் தண்ணீர் கொடுப்பதும் அக்குளா மேலால் கணக்கு எடுப்பதை பிலப்படுத்தவும் தத்துவமுண்டு. தண்ணீர் கொடுப்பதைப்பற்றியும் அதிகமானமட்டுக்கு வாடை அறவிடு முறைமையும் 20 ம் அறுத்திலக்கனுக்கு மிதுக்கும் நியமனம்.

*நூதினமாகச் செய்யும் எல்லா கொடுக்கலினும் அளவை ஒன்டு வைப்பது கடமை யென்பதும் மேலதிகம் சலத்துக்கு வாடகை எடுப்பதும்.*

சொந்தப் பாவிப்புக்கு தண்ணீர் கொடுக்கும்போது வீட்டுக் குளாவுடன் காணிக்கிடையில் சேர்ப்பதில் அதெர்க்குத் தேள்வையாகிய குளா பிலப்படுத்தல் கொடுத்தல் போடுதல்வேலை சுப்ரின்டனின் வேலைகாறரால் கேள்விக்காறனின் சிலவினால் செய்யப்படும். இவ்வேலை துவங்குமுன் அதுக்காகிய பாணிப்பு பண்ணி நகரசங்க பணத்துக்கு கொடுக்கவேண்டும், அல்லாமலும் மேலைக்கு வேண்டிய திருத்துதல் நெடுப்பித்தல் வேறுபடுத்தல் வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் சிலவினால் செய்யவேணும்.

*பிடிப்பவைகளாகியவைகள் கடன்களுக் கடிபடாமை.*

உடந்தைக்காறன் அல்லது குடியிருப்பவன் கடனுக்கு குளாவாவது அதைப்பத்திய ஏதுவகையாவது பிடிக்கக்கூடியதாக மாட்டாது.

*எத்தலத்துக்கும் உள்போய் சோதிப்பதர்க்கு அங்கத்தவருக்கு உள்ள தத்துவம்.*

17. காலை 8 மணி துவர்க்கம் மாலை 5 மணி வரையில் என்நேரத்திலாவது அங்கத்தவர் இச்சட்டப் பிரகாரம் தண்ணீர் கொடுக்கும் எத்தலத்துக்குள் போய் அறிவித்தல்பண்ணிப் போய் அங்கு குளாவைத் திருப்பதை வீணாக தண்ணீர்விடுதலை அன்னீத பாவினைபண்ணுதலை சோதினைபண்ணக்கூடியது அங்கத்தவர் அல்லது அவரால் கட்பிக்கப்பட்டவர் சொல்லிய வீட்டுக் கல்லது கட்டுமானத்துக்கு சோதிப்புக்காகப் புகுதலை வீடல்லது கட்டுமானத்தை யுடையவன் அல்லது குடியிருப்பவன் போதிய காரணமில்லாமல் தடைபண்ணப்பட்டால் அவ்வீட்டுக் கல்லது கட்டுமானத்துக்கு தண்ணீர் கொடுப்பதை அங்கத்தவருக்கு தடங்கல்பண்ணக் கூடியது.

*சலம் வீணாகப் போகில் அங்கத்தவருக்கு நிறுத்தக்கூடிய தன்மை.*

18. நீர்குளாவால் அல்லது நீர் எடுக்கும் குளாவால் அல்லது ஏதும் அதெர்க்காக பிலப்படுத்தியவைகளால் தண்ணீர் வீணாய் சேதப்பட்டால் அச்சணமே அங்கத்தவர் தண்ணீர் கொடுப்பதை தடைபண்ணுதல் அல்லாமல் வீதிக்குளாவுடன் சேர்ப்பதை நிறுத்தப்படும்.

*சலம் ஒழுகுதலை றிபோட்பண்ண கடமை.*

ஏதும் குளாக்களால் அல்லது நீர்பெட்டியால் அல்லது மற்றும் ஏதும் பிலப்படுத்துதல்களால் எவ்வீட்டில் தலத்திலாவது ஒழுகச்செய்தால் 24 மணி நேரத்துள் வீடுடையவர் அல்லது குடியிருப்பவர் நகரசங்க சக்கிறுத்தாருக் கறிவித்தல்பண்ண வேண்டியது.

*குளா ஆகியவைகள் புதுப்பிக்காவிடில் விதிக்கும் அபராதம்.*

19. தண்ணீர் வேலையால் தண்ணீர் பெட்டவன் வேண்டுதலால் அல்லது கவனிப்பு இல்லாமல் குளா, குளா அடைப்பு, பூட்டுதல், நீர்பெட்டி, நீர்க்காமற அல்லது ஏதும் அவைக்குடையவைகளை புதுப்பியாமல் வைக்கப்பட்டால், எடுக்கப்பட்ட தண்ணீரை தேள்வைக்கதிகம் வீணாக்கினாலும் அசுத்தவகைகளை குளாக்குள் போக ஏதுவித்தாலும் அவன் ரூபா 50 துக் கதிகப்படாத அபராதத்துக்குஉள்ளாவார்கள்.

*சலத்தில் வேத்துமைப் பாவிப்பு பண்ணில் அளவை யொன்று வைத்த அதிக பாவிக்கு முதல் அறவிடுதல்.*

20. ஏது தலத்துக்காவது நகரசங்க தண்ணீர் வேலையால் தண்ணீர் எடுப்பதை அக்குடும்பத்தாரல்லாதவர் பாவிப்பதை சங்கத்தாருக் கறியவந்தால் அத்தண்ணீரைத் தேள்வைக்கதிகம் போவதுக்காக அத்தலத்துக்கு சங்கத்தாரால் அளவுகணக்கிட்டு வீடுடையவன் அல்லது குடியிருப்பவனிடம் ஒருகுவாட்டருக்கு தண்ணி வாடகையாக 3000 கலனுக்கு ஒரு ரூபாவிதம் நியமனத்துக்கதிகமுள்ள கணக்குக்கு 1000 கலனுக்கு ரூபாய் 1 வீதமாயும் கொடுக்கவேண்டும்.

*குளாவாகியவைகள் புதுப்பிக்கவும் அதெத்காகிய சிலவு அறவிடவும் அங்கத்தவருக்குள்ள தத்துவம்.*

21. சங்க அங்கத்தவர் அல்லது அவரிடம் கட்டளைபெற்றவர் ஏதும் குளா, குளா அடைப்பு மூடுதல், நீர் பெட்டி, நீர் காமற அல்லது இதர்க்குடைய ஏது வஸ்துகள் தண்ணீர் வீணாய்போவதை தடைபண்ணவேண்டிய திருத்துதல் பண்ணிவித்து சங்க அங்கத்தவர் கையெழுத்து வைத்து அதற்காகிய சிலவை 1910 ௵ நகரசங்க சட்டப்படி வீடுடைய அல்லது குடியிருப்பவரிடம் கற்பிக்கும்படி அறவிடப்படும்.

*எவராகிலும் தப்பாக சலம் பாவிப்பு அபராதம்.*

22. ஆராகிலு மொருவர்,

(a) தமது போஜன விஷயத்துக்கல்லாத பாவினைக்கு தண்ணீர் பெறுமல் அப்பாவினையைப் பற்றி முன்சொன்ன பிரகாரம் தண்ணீரைப் பாவித்தா லல்லது;

(b) தமது போஜன விஷயத்தைவிட வேறு உபயோகத்துக்கு எடுத்த தண்ணீரை அதல்லாத கருமங்களுக்கு எடுத்தலும் அவன் 20 ரூபாவுக் கதிகப்படாத தெண்டத்துக் குள்ளாவ தல்லாமலும் பிசகான கருமத்துக்காக எடுத்த தண்ணீருக்கு வெகுமதி அறவிடுதலுக்கு உள்ள, தத்துவத்துக்கு மாறுகாது.

*அங்கத்தவர் பிரியமில்லாமல் ஏதும் குளா போல் கொத்தவைகளுக்கு யேதுமொரு வகையை கொடுப்பதில் விதிக்கும் அபராதம்.*

23. தண்ணீர்வேலையால் தண்ணீர்பெற்ற வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் அல்லது தண்ணீர் பாவிப்பவன் அல்லது ஆராகுதல் தண்ணீர் வேலைக்குடைய அல்லது சங்கத்தவருக்குடைய அல்லது சொந்தப்பாவினைக்குடைய குளாவாயிருந்தாலும் சங்கஅங்கத்தவர் பிரியமில்லாமல் குளாவை அல்லது அதைப்பற்றிய ஏதுவகையை ஆவது பிலப்படுத்த அல்லது செய்விக்க இக்கட்டளைப்பிரிவுக்கு மாத்தமாகிய மத்துமேதும் செய்கை ஆவது ஆராகுதல் செய்தால், ரூபாய் 50 துக்கதிகப்படாத அபராதத்துக்குளராவ ரல்லாமலும் அவனால் செய்யப்படும் குற்றத்தாலாகிய சேதத்துக்கும் வீணாக்கிய பிசகாய பாவினை பண்ணியதுக்கு அறவிடும் சிலவுக்கு இந்த தெண்டம் வேத்துமைப்படாது.

*போசன விஷத்துக் கல்லாதவைகளுக்கு எடுக்கும் சலத்துக்கு அறவிடும் வாடை.*

24. போஜன விஷயத்துக்கல்லாத கருமங்களுக்கு எடுக்கும் தண்ணீர் குளாவுக்குமேல் அளவிடுகை பிலப்படுத்துவதற்கு சங்கத்தவர்களுக்கு தத்துவமிருக்கிறது. 15 ம் இலக்க சட்டப்பிரமாணமாக பாவினைபண்ணும் தண்ணீருக்கு முதல் அறவிடப்படும். 1910 ம் ௵-த்து 6 இலக்க கட்டளைச்சட்டப்படி ஒரு காணிக்கு வருஷத்துக்கு பொறுமதி பாணிப்புபண்ணி $\frac{3}{4}$ பங்கை அவ்வறவிடும் தொகையால் களிக்கப்படும்.

*பொருத்தத்துக்குள்ளாக கொடுத்த சலம்.*

நகரசங்கஅங்கத்தவருடன் இதோடணைத்திருக்கும் இடாப்பின் A போம் பிரகாரம் பொருந்தி கட்டுப்பட்டால் பிரியமுள்ளவர்களுக்கு போஜன விஷய மல்லாதவைகளுக்கு தேள்வையாகிய தண்ணீர் பெற்றுக்கொள்ளக்கூடியது.

*சலம் பெறவிடை பெற்றவர் அல்லாதவர்களுக்கு சலம் கொடுப்பதினும் கொடுபோக இடம் கொடுப்பதிலும் விதிக்கும் அபராதம்.*

25. இச்சட்டப்பிரகாரம் தண்ணீர் பெறும் வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் பிற எவனுக்காவது தண்ணீர் கொடுப்பது குளாவினால் அல்லது நீர் பெட்டியினால் அவன் பிரியத்துக்கு எடுக்கவிட்டால் குற்றம்செய்ததாகும், அதற்கு ரூபாய் 50 துக் கதிகப்படாத தெண்டத்துக்குளாவர் அல்லது தீதணிப்பைப்பற்றி அல்லது தண்ணீர் வேண்டுபவன் நகரசங்கத் தண்ணீர் பெறுபவன் அல்லது தனது குற்றமில்லாமல் தமதுஸ்தானத்துக்கு தண்ணீர் எடுப்பதை நிறுத்தப்பட்டவர்களாகியவர்களுக்கு கொண்டு போகக்கொடுப்பது குற்றமாக மாட்டாது.

*போசன விஷயத்துக் கல்லாதவர்களுக்கு சலம் கொடுப்பதில் விதிக்கும் அபராதம்.*

**26.** தண்ணீர் வேலைக்குடைய தடாகத்தால் அல்லது நீர் வழியால் அல்லது குளாவினால் அல்லது சொல்லிய தண்ணீர் வேலையால் கொடுக்கப்பட்டிருக்கிறபெட்டியால் போஜன பாவினைககாக வைத்திருக்கும் தண்ணீரினால் அன்னீதமுறை எவராகிலும் எடுத்தால் அல்லது கொண்டுபோய் உபயோகித்தால் ரூபாய் 50 துக் கதிகப்படாத அபராதத்துக்குளராவர்.

*சலத்தொளிலால் அதற்குடைய ஏதும் சொத்துக்களை அல்லது சலத்தை வீணாக்கினால் விதிக்கும் அபராதம்.*

**27.** நகரசங்க அங்கத்தவர் விடை பெறுமல் வேண்டுதலாக அல்லது கவனயீனமாக பூட்டை நீர் சூஸ்திரத்தை, குளாவை அல்லது அதற்குடைய ஏதுவஸ்துவை ஆவது வேலைபாடுகளை உடைத்தல், சேதப்படுத்தல் இடைவிடுதல், மூடுதல் தப்பாக உளத்தினாலும், தண்ணீர் வேலைக்குள்ள நீர் விடத்தால் நீரை பிறப்படுத்தினும் வேண்டுதலாகிய கருமத்தினால் தண்ணீரை பிறப்படுத்தினாலும் தண்ணீர் கொடுப்பதற்கு எவ்வித இடர்பண்ணினும் ரூபாய் 50 துக் கதிகப்படாத அபராதத்துக்குளராவர்.

*சிலகருமங்களில் சலம் கொடுப்பதை குறித்துவிட அங்கத்தவருக்குள்ள தத்துவம்.*

**28.** சங்க அங்கத்தவர் தேள்வை கண்டபோது தண்ணீர் வேலைக்குள்ள பூரணமாக அல்லது குறைவாக உள்ள குளா அல்லது வேறு ஒருவிதமான தண்ணீர் குறைவாக்க தடைபண்ண, அடைக்க அல்லது வேறுபக்கத்துக்கு திருப்பகூடியது. சங்க அங்கத்தவர் நீதமெனக் காணும் போது இவ்விதம்பண்ணுவதில் தண்ணீர் வாடைக்கும் அளவுவாடைக்கும் வேறு அறவிடும் வாடைக்கும் இந்தக்கட்டளைச்சட்டத்தில் குறிக்கப்படும் மத்தும் ஏதுகருமங்களுக்கும் இடரும் சேதமுமாகாது.

(1) தண்ணீர் வேலைக்கடங்கிய தண்ணீர் கொடுப்பது சங்க அங்கத்தவர்களுக்கு போதியதல்லையெனக் கண்டால்.

(2) தண்ணீர் வேலை திருத்துதலில் வேறுப்படுத்துதலில் அல்லது சுத்தப்படுத்துதலில் அல்லது சேர்ப்பதில்.

(3) பிரசித்த தண்ணித் தூன் சேதப்பட்டல்லது நீர்கெட்டு அல்லது வீணாக போனாலும்.

(4) இல்லகுப்பின் காரியப் பிரகாரம் சுமைத்தல் வேறுபடுத்தல் திருப்பிச் சுமைத்தல் வீடுடையவன் செய்யாவிட்டால்.

(5) இந்தக் கட்டளைச்சட்டப்படி கொடுக்க வேண்டியதைக் கொடாமல் வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் கொடாவிட்டால், வீடுடையவன் கேள்விப்படி கொடாதிருக்கும் காலவரையில்.

(6) தீபிடிக்கும் வேலையில்.

(7) ஏதும் பிரசித்த தண்ணீர் குமிளியில், அளவிடுதலில், கொடுப்பதில் குறைவு சேதம் வீணாகுதல் தப்புப்பாவினையைப்பற்றியவை இச்சட்டத்துக்கு மாற்றமாகிய செய்கைசெய்தால்.

*சமைாகிய வைகளை அசுத்தமாக்குவதில் விதிக்கப்படும் அபராதம்.*

**29.** இதின் கீள் சொல்லப்படும் எந்த தப்புதமாவது செய்தவனுக்கு ஒவ்வொரு தப்புதத்துக்கும் ரூபாய் 50 துக் கதிகப்படாத அபராதத்துக்குள்ளாவர்.

(*a*) வீதிகளில், பாதைகளில் பிரசித்த தலங்களில் சங்கத்தவர் இப்போதைக்கு உள்ள அல்லது மேலைக்கு வைக்கப்படும் எந்த தண்ணீரில் நீர் தூணில், தண்ணிக் குமிளியில் தண்ணிப் பெட்டியில் குளாவில் அல்லது தண்ணீர் வேலை அடுக்க அல்லது அண்டையில் மேனி களுகுதல், மொளுகுதல் ஆடு மாடு குதிரை நாய் ஏதும் மத்தும் மிருகசாதிகள் கரத்தைகள் உடுப்பு அல்லது பாத்திரம் களுகுதல் தடையாகும்.

(*b*) ஏதும் செத்தவகை குப்பை கூளம் இடைஞ்சலாகியவைகள் சொல்லப்பட்ட தண்ணீர் வேலையில், அதற்குடைய நீர்ப்பாதையில், தடாகத்தில், நீர் சூஸ்திரத்தில், மேல்பெட்டியில் எறிவதும், ஏதும் துணிகள் தொலிகள் மயிர்கள் பிடவைகள் களுவுதல் தடங்கலாகும்;

(*c*) தண்ணீர் வேலையில் அல்லது அதற்குடைய கட்டுமானத்தில் தானங்களில் தண்ணீர் கொடுக்க ஆதார யிடங்களில் உள்புகுதுவது தடையாகும்;

(*d*) தண்ணீர் பாதை, தடாகம், நீர்பெட்டி, கிணறு, நீர்குமிளி, நீர்தூண், அல்லது தண்ணீர் கொடுப்பதுக்காகிய எவ்வகையை ஆவது உடைப்பதும் சேதப்படுத்துவதும் தடங்கலாகும்;

(*e*) ஒருவனுக்குடைய குளி, கான், புகைசூஸ்திரம் பொர லர் அல்லது அவனுக்குடைய ஏதும் வஸ்துகளிலுள்ள தண்ணீர், தண்ணீர் வேலைக்குள்ள தடாகத்துக்கு நீர் பாதைக்கு போகவர இடம்பாடுவைப்பதும் தண்ணீர் கட்டுப்பாடாக கெட்டுப்போக எவ்வளவாவது இடைவிடுதல் தடங்கலாகும்;

மேலும் செய்த குற்றத்தை சங்க அங்கத்தவர் எழுதி அறிவித்த பிறகு முடிவில் சொல்லப்பட்ட குற்றம் நெடுகிலும் செய்ய இடம்பாடாகினால் ஒவ்வொரு நாளைக்கும் (ஒரு நாளைக்கதிகப்பட்டால்) ரூபா 10 தெண்டத்துக்குளாவர்.

*சலக்கருமத்துக்குடைய ஏதும் சலபாதைகளைப்போல் கொத்தவையை அசுத்தப்படுத்துதவில் விதிக்கும் அபராதம்.*

**30.** ஏதும் வேலைசெய்யும் தலத்தில் உடந்தைக்காறன், குடியிருப்பவன் கருமம்பார்ப்பவன் ஆகியவர் சுப்பரின்றன்டன் அவர் பனிய செய்கைக்கு ஏதும் நீர்வளி தடாகம் நீர்பெடடி அல்லது அதற்குடைய ஏது வஸ்துக்காவது கெடுதியாகிய ஏதுவகையான கெடுதல் வரத்தக்க கருமம் செய்தாலும் அவன் குத்தம்செய்தவனாகும்; அதற்கு அபராதமாக 37 ம் இலக்க வகுப்புப்படியும் அல்லாமல் ரூபா 50 துக்கதிகப்படா அபகாரத்துக்குளராவர். அங்கத்தவர் கையெழுத்துவைத்து அறிவித்தல்கொடுத்து 24 மணி நேரத்தின்பின் இக்குத்தம் செய்துவரும் ஒவ்வொரு நாளைக்கும் ரூபா 25 அபராதம் விதிக்கப்படும்.

*சோதித்து நீர் மானம்பண்ணுவதற்காக குளா திறப்பதில் ஆகும் சிலவு அறவிடுதல்.*

**31.** குளாவை திறந்து பார்க்கும்போது குளாவுள் நீர் கெட்டு அல்லது கட்டுப்பட்டு இருந்தால் சோதிப்புக்கு போன வந்த சிலவுகளை அக்குளா உடையவன், காரியகாறன், தத்துவக்காறனால் கொடுக்கவேண்டும். சோதிப்பில் கெடுதிகள் இல்லையெனக் கண்டால் அச்சிலவை சங்கத்தில் ஒத்துக்கொள்ளப்படும்.

*புதைக்கப்படும் சலபெட்டியில் சலம் வைப்பதுகூடாதென்பது.*

**32.** பூமியில் புதைத்த கிண்டிய நீர்பெட்டி அங்கத்தவர் எழுதிப் பெற்றுக்கொள்ளாமல் அதில் தண்ணீர் நிறைப்பது கூடாது.

*சலம் வைப்பதுக்கு பாத்திரம்.*

**33.** அதுள் லோகத்தினால் செய்யப்பட்ட போர்விடா மரவகையான பாத்திரத்தில் நிறைக்கக்கூடாது.

*சலம் வைப்பதுக்கு சங்கத்தவர்களுக்கு தத்துவம் உண்டென்பது.*

**34.** சங்கத்தவருக்கு நீதமெனக்காணும் நேரத்தில் தண்ணீர் கொடுப்பதை நிறுத்தவும் கூடும்.

*கட்டளைச்சட்டம்.*

**35.** நகரசங்க எல்லைக்குள்ள எத்தண்ணீரை உபயோகிப்பதும் இத்துடன் அணைத்திருக்கும் இடாப்பின் சட்டப்படியேயாம், இதின்கீழ் சொல்லப்படும் கருத்துப்படி வேண்டிய நூதின சட்டம் உண்டுபண்ண தத்துவமிருக்கும் :—

(*a*) சங்கத்தால் பெறும் தண்ணீர் வீணுக்குதல், குத்தமான பாவினை, தேள்வைக்கதிகம் பாவிப்பது கெடுத்தல் தடைபண்ணுவதற்காய் ;

(*b*) குளா, குளா மூடுதல், அடைப்பு, தண்ணீர் பெட்டி, தண்ணீர் காமறை ஆகிய பாத்திரமாகியவைகள், தண்ணீர் கொடுபோவது, கொடுப்பது சேர்ப்பதாகியவைகளுக்குமட்டு திட்டம் வலுமைவகை சமைத்தல் வைக்குமிடம் வேறுபடுத்தல் அகத்துவது புதுப்பித்தல் ஆகியவை ஏர்ப்பாடாக்குவதற்காய் :—

(*c*) பிரசித்த முளுகும் தலம் மிருகவகை துணி களுகுமிடம் வைப்பதுக்கும் பாவிப்பதுக்கும் நியமனத்தைப்பற்றி ;

(*d*) தண்ணீர் வேலையால் பிரசித்த நீர்தூணிலுல் தண்ணீர் கொடுப்பதும் பாவிப்பதும் ;

(*e*) சொந்த தண்ணீர் கொடுத்தலாலும் அதுக்குடைய புடிப்பு ஆகியவைகளாலும் ;

(*f*) அளப்பினுல் தண்ணீர் கொடுப்பதை வலுவாக்குதலும் அதற்காகிய அளவு எத்திரமாகியவைகள் வலுவாக்குதலும் ;

(*g*) போஜன வகைகளல்லாத கருமங்களுக்கு தண்ணீர் கொடுப்பதும் அதற்காகிய வாடை ஆகியவைகளை வலுவாக்குதலும் ;

(*h*) சங்கத்தாருக்கு தேள்வையெனக் காணும் ஏதுவகையான தண்ணீர் கொடுத்தலைப்பற்றியும் அதை வலுவாக்குதலைப்பற்றியும்.

*சட்டங்களை வேறுபடுத்த சங்கத்தவருக்குள்ள தத்துவம்.*

**36.** எந்தச் சட்டத்தையாவது தடவைக்குத்தடவை வேறுபடுத்தவும், புதுப்பிக்கலும் இல்லாமலாக்கவும் கூடியது. அதற்காக வேறு சட்டம் உண்டுபண்ணவும் கூடும். அப்படிச் செய்யக்கூடியது இத்தேசத்திலுள்ள எந்த வகுப்புக்காவது சட்டங்களுக்காவது மாத்தமல்லாவிதத்திலும் சட்டத்துக்கு மாத்தம்பண்ணும்போது விதிக்கும் தெண்டம் ரூபா 50 துக் கதிகப்படாமலும் சட்டத்துக்கு மாத்தம் பண்ணியதாக அங்கத்தவர் எளுத்து மூலமாக அறிவித்தல் கொடுத்த பின்வரும் ஒவ்வொரு நாளைக்கும் 10 ரூபாவுக் கதிகப்படாததாகவும்.

*இலங்கை தேசாதிபதி அவர்கள் மந்திராலோசனைச் சங்கத்தவர்களின் அநுமதிப்படி சட்டங்கள் தீர்மானிக்கப்படுமென்பது.*

**37.** எச்சட்டமாவது வேறுதல்படுத்தலாவது திருத்துதலாவது அளித்துப்போடுதலாவது அதற்காக வேறு உண்டுபடுத்துவது மந்திராலோசனைச்சங்கத்தவர் அநுமதிப்படி தீர்மானிக்கும் வரையில் பாவிப்ப தகாது, அப்படி தீர்மானிப்பதை பிரசித்தப்படுத்தப்படும். இன்னும் தீர்மானப்படுத்தியபின் இராசாங்க "கசட்" பத்திரிகையில் பிரசித்தப்படுத்தியபின் இங்கு வளங்கச்செய்ய தத்துவமிருக்கிறது.

*சட்டங்களுக்கு மாற்றம்பண்ணுதற்கு விதிக்கும் அபராதம்.*

**38.** இத்துடன் அணைத்திருக்கும் இடாப்பிலுள்ள எந்த சட்டத்தையாவது மாத்தம்செய்தால், 35 வது 36வது பிரிவில் சொல்லிய மாத்தக்காரன் அல்லது குத்தவாளியாவர். இன்னும் 36வது பிரிவில் சொல்லிய மாத்தம் நெடுகிலும் நடத்திவந்தா லதற்கும் குற்றவாளியாகி 35வது 36வது வகுப்புக்கும் ரூபா 50துக் கதிகப்படா அபராதத்துக்கும் உளராவர்.

*அறிவித்தல்கொடுத்தல்.*

**39.** வீடு அல்லது காணி உடையவன் அல்லது குடியிருப்பவனுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டால் வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் பேருக்கெளுதி அங்கு குடியிருப்பவனுக்கு கொடுக்கப்படும். இல்லா வரையி லக்குடும்பத்தில் மேல்பட்டவனுக் கல்லது பணிவிடைக்காறனுக்கு கொடுக்கப்படும். அப்படி கொடுக்கக் கூடாவிட்டால் குடியிருப்பவன் இல்லாவிட்டால் வீட்டில் அல்லது காணியில் நல்லாக தெரியுமாகிய ஒரு தலத்தில் அடிக்கப்படும். அப்படியாக்கொத்த அறிவித்தலில் வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் பேரை குறிப்பது வேண்டுதலாகாது. ஏதும் ஒரு வீட்டில் கட்டுமானத்தில் காணியில் வருமதி ஒப்புக்கொள்பவன் அல்லது ஏஜன்ற் இச்சட்டத்தின் விளப்பத்துக்கு வீட்டு அல்லது கட்டுமானத்து அல்லது காணியின் உரித்தாளியென ஒப்புக்கொள்ளப்படும்.

**40.** 1910 ம் ஷ 6 மிலக்கச்சட்டத்தின் 243வது பிரிவினும் இச்சட்டத்தினும் தத்துவத்தின் பிரகாரம் அதற்காக அல்லது பொதுவாக ஏற்படுத்தப்பட்ட எந்தத் தலைமைக்காறன் வலுமைபடுத்தி செலுத்த அங்கத்தவரால் எளுத்து மூலமாக கற்பிக்கப்படும்.

---

இடாப்பு.

**1.** பிரசித்த நீர்தூணிலுல் நீர்கொடுபோவது பாளி அல்லது அதுக்காகிய ஏனத்தாலாகும் அல்லாமல் கான்களுக்கு அருகோடைக்கு வீதிக்கு அல்லது அடிப்பாதைக்கு அல்லது மேலால் ஓடாவிடா விதமுமாக.

**2.** பிரசித்த நீர்தூணுக்கு பிடவை குளா அல்லது வேறேதும் குளாக்கள் கொஞ்ச நேரத்துக்காவது நெடு நேரத்துக்காவது சேர்ப்பது கூடாது.

**3.** பிரசித்த நீர்தூணுக்கு தொடுத்திருக்கும் தன்னுக மூடிப்படும் மூடி அல்லது அதெர்க்காதாரமாகியவயை அதாலுண்டாகும் நடப்பை தடுப்பது தவறுகும்.

**4.** A போற்மின் பிரகாரம் நகரசங்கத்துடன் பொருத்தத்துக்கு கட்டுபடாமல் பாவிப்புக்கு கொடுக்கும் நீரை வேறேது தொளிலுக்காவது வேலைகளுக்காவது அலங்காரப்படுத்துவதெர்க்காக சூஸ்திர கருத்துகளுக்கு பூமிக்கு தண்ணீர் ஊத்துவதுக்கு எடுப்பது தடையாயிருக்கும்.

**5.** ஒரே எல்லையில் ஒரே குடியிருப்பு யிடத்துக்கு தண்ணீர் வேலையால் கொடுக்கக்கூடியது ஒத்தக்குளாவாகும்.

**6.** எந்தக் குளாவினுலும் அளவுகளிலாலும் வேறு பிலப்படுத்துதல்களால் தண்ணீர் வீணுகப்போகில் அச்சணமே அங்கத்தவரால் தண்ணீரை நிறுத்தப்படும். பிசகை சரிபண்ணும் வரையில் தொடுக்கமாட்டாது.

**7.** ஒரு தலத்திலுள்ள குளாவை பிற ஒரு தலத்திலுள்ள குளாவுக்காவது நீர்பெட்டிக்காவது வேறு பிலப்படுத்தல்களுக்காவது சேர்க்கக்கூடாது.

**8.** நீர்வேலைக்குடைய சொந்த தலத்திலுள்ள குளா குளாமூடி அளவிடுகை அதின் பெருப்பம் தத்துவமுள்ள மாதிரி ஆகியவை செய்யும் முறைமையால் நீர்ஓடுதல் தப்புப் பாவினை தேன்வைக் கதிக பாவினை கெடுத்தலாகியவைகளாகுமென சங்க அங்கத்தவர் போதிய நியாயம் கண்டால், அவ்வீடுடையவனுக்கல்லது குடியிருப்பவனுக்கு B போம் பிரகாரம் அறிவித்தல் எளுதி வேறுதல்படுத்தவேண்டிய முறைமையை அறியப்பண்ணி வேறுதல் அங்கத்தவர் அல்லது அவரால் எளுத்து மூலமாக ஏர்ப்படுத்தியவர் பிரியப்படி வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் செய்யவேண்டியது. வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் விலாசம் அறியாவிட்டால் அவ்வறிவித்தல் அவ்விடத்தில் நல்லாகத் தெரியக்கூடிய இடத்தில் ஒட்டப்படும். அதின்பிறகு இச்சட்டத்தின் விளப்பப்படி கொடுத்ததாக ஒத்துக்கொள்ளப்படும்.

9. அங்கத்தவர் போதனைப்படி புது நீர்கொடுத்தல் இப்போதைக்குஉள்ளவையும் வேறுதல்படுத்தியதும் செய்ய வேணும். குளாவின் அகலம் பருப்பம் அதை வைக்கும் முறை நம்பர் பெருப்பம் மாதிரி கருணியின் பெருப்பம் பாவினை பண்ணுபவனின் கருத்தை கேள்பது அங்கத்தவர் பக்கத்தில் வைத்து நீர்கொடுத்தலை வேறுபடுத்தி உள்ள கருமங்களை தீர்மானித்துக்கொள்ள.

10. நூதனமான தண்ணீர் கொடுத்தல் வைப்பதுக்கு இப்போதைக்கு வைத்திருக்கிற அல்லது வேறுதலாக்குதல் நெடுப்பித்தல்பண்ணுவதுக்கு அங்கத்தவருக்கு அவர் கந்தோரால் பெற்றுக்கொள்ளக்கூடிய போம் பத்திரிகையில் குறித்து அறிவித்தல் கொடுக்கவேணும், இவ்வறிவித்தல் (F போம் பிரகாரம்) அங்கத்தவர் பேருக்கு எழுதி அவர் கந்தோருக்கு கொடுக்கவேணும், இவ் எவ்வேலைகளும் அங்கத்தவர் அல்லது அவர் எழுத்து மூலமாக தத்துவம்பெற்றவர் பிரியத்துக்கு மாத்தமாக செய்யப்படாது.

11. நூதின தண்ணீர் கொடுத்தல் அல்லது வேறுபடுத்தல் அல்லது வைத்திருப்பதை நூதினப்படுத்தல் எல்லாம் அங்கத்தவர் ஒத்துக்கொள்ளும்படி செய்யக் கடமை சரியென ஒத்துக்கொள்ளும் குளா ஆகிய பிலப்படுத்துதல் மட்டையும் பாவினைபண்ணவேணும் அங்கத்தவர் கந்தோரால் விதத்தை பாத்துக்கொள்ளக்கூடும்.

12. அங்கத்தவர் சோதினைபண்ணி ஒத்துக்கொள்ளும் வரையில் எக்குளாவாகிலும் குளாப்பூட்டாவது வேறு பிலப்படுத்தியவைகளில் ஒன்றுவது மூடக்கூடாது. இதுகளை சோதித்துப் பார்த்து நல்லதென ஒத்துக்கொண்டபின் அங்கத்தவர் அல்லது அவர் தத்துவம்பெற்றவர் பாணித்து வேலைசாமாங்கள் சேர்ப்பதாகியவைகளின் சிலவு கேள்விக்காரனால் நகரசங்கத்தில் ஒப்புவிக்க கடமை. அப்போது தண்ணீர்வேலை பகுதியாருடன் கேள்கும் தண்ணீர்கொடுத்தல் தொடுத்து தண்ணீகொடுக்க துயருவாகள். தொடுத்தல் தொடுக்க தத்துவமுள்ளது அங்கத்தவருக்காயிருக்கும். இன்னும் கேள்விக்காரனுக்கு D போம் பிரகாரம் கணக்குசெய்து கொடுக்கப்படும். ஒப்புவிக்கப்பட்ட முதலில் அதிகமிருந்தால் அதை திரும்ப கொடுக்கப்படும் பாணிப்புக்கு அதிகம் சிலவாகினால் அதை முன்சொன்ன கணக்கை கொடுத்தச்சணமே கேள்விக்காரனால் கட்டவேண்டியது.

13. கனத்த அடியுள்ள சுத்தப்படுத்திய இரும்பு சில்லு உள்ள அல்ல சவிஉள்ள பித்தளை கரும்புநீர்பெறும் குளாவில் பிலப்படுத்த வேண்டியது. சுத்தப்படுத்திய இரும்பிலானால் அடைப்பு அல்லது குளா அடைப்பு உள்ள கீளுக்கு இஸ்குறுப்பு திருப்புகிற கரும்பாக யிருக்கவேணும். இரண்டு அங்குலத்துக்கதிகம் பருப்பமுள்ள குளாவானால் நீர்பூட்டு வளுகிப்போகும், குளா அடைப்பு உள்ளதாகவேணும் கரும்பு அல்ல குளாஅடைப்பு பிலப்படுத்தவேண்டியது படியிருந்தால் அதுக்கடியில் கட்டிய கிட்டலாகிய தலத்தில் எந்நேரமும் திறந்து பார்வையிடக்கூடிய விதமான இரும்புமூடி போட்டுவைக்கவேண்டியது.

14. வீதிக்குளாவிலிருந்து ,காணியின் குளாமூடி வரையில் நீர்கொடுக்கும் குளா நகரசங்கத்துக்குடையதாக்யிருக்கும் அங்கத்தவரால் அதை புதுப்பித்தலாகியவைகள் செய்பவேணும். இக்காணியின் குளாமூடிக்கு சேதம்வரப்பட்டால் சொத்துடையவர் அல்லது அனுபோகிப்பவர் சிலவால் அங்கத்தவர் செய்விக்கவேண்டியது. அதுக்காகிய சிலவு சங்கத்துக்கு இறுக்கவேண்டியது, இதுக்குடைய சிலவு கொடாவிடில் அத்தலத்துக்கு தண்ணீர் கொடுப்பதை தடைபண்ண அங்கத்தவருக்குத் தத்துவமிருக்கும்.

15. எத்தலத்துக்காவது எக்கருமத்தைப்பற்றியாவது தண்ணீர் கொடுப்பதை தடைபண்ணியபின் தொடுக்க கேட்டால் வீடுடையவர் அல்லது குடியிருப்பவர் அதற்காக பாணித்த முதலை ஏர்க்கணமே சங்கத்தில் கட்டவேண்டியது. ஏதும் அதிகமிருக்கில் வேலைமுடிந்தபின் அதை உடந்தைக்காரனுக்கு கொடுக்கப்படும் மேல்கொத்த சிலவாகில் உடையவர் சங்கத்தவர்களுக்கு கொடுக்கவேண்டும்.

16. தண்ணீர் கொடுத்தலைப்பற்றி எக்கருமங்களும் சங்கத்தவரால் பூரணமாக முடித்துக்கொடுத்தபின் குளா பிளவினால் அல்லது பெருகிப்போனால் வரும் சேதத்துக்கு நகரசங்கத்தவர் பாத்தியப்படமாட்டார்கள். இன்னும் வீதிக் குளாவிலிருந்து கேட்ட தலம்வரையில் குளாமூடியளவில் பாத்தியப்பட சங்கத்தார் எந்த விடைகொடுப்பதுக்கும் செய்கைக்கும் கட்டுப்பட்டில்லை.

17. தண்ணீர் கொடுப்பதில் எல்லாக் குளாகளும் சீனச்சட்டி இரும்பினால் அல்லது சரிபண்ணிய இரும்பினால் அல்லது ஈயத்தினால் செய்யவேணும்.

18. சரிபண்ணிய இரும்பினால் செய்யப்பட்ட குளா "பஸ்ட்வோடற் பைபிங்" என்கிற சாதியிலதல்லாமல் இதின் கீழ் உள்ள பாரப்பிறமாகும் :—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உள்குறுக்குப்பருப்பம் | அங்குலம் | $\frac{3}{8}$ | நெடுப்பம் | 100 | பூட்டு | 60 | முத்தல் பாரம் |
| ,, | ,, | $\frac{1}{2}$ | ,, | 100 | ,, | 98 | ,, |
| ,, | ,, | $\frac{3}{4}$ | ,, | 100 | ,, | 130 | ,, |
| ,, | ,, | 1 | ,, | 100 | ,, | 212 | ,, |
| ,, | ,, | $1\frac{1}{4}$ | ,, | 100 | ,, | 280 | ,, |
| ,, | ,, | $1\frac{1}{2}$ | ,, | 100 | ,, | 345 | ,, |
| ,, | ,, | 2 | ,, | 100 | ,, | 470 | ,, |

19. எல்லா ஈயக்குளாவும் கனத்ததாகவும் இதின்கீழ் காணும் பாரத்துக்கு குறைவு இல்லாததாகவு மிருக்கும்.—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உள்குறுக்குப்பருப்பம் | அங்குலம் | $\frac{3}{8}$ | நெடுப்பம் | 1 | பூட்டு | 5 | முத்தல் பாரம் |
| ,, | ,, | $\frac{1}{2}$ | ,, | 1 | ,, | 7 | ,, |
| ,, | ,, | $\frac{3}{4}$ | ,, | 1 | ,, | 11 | ,, |
| ,, | ,, | 1 | ,, | 1 | ,, | 15 | ,, |
| ,, | ,, | $1\frac{1}{4}$ | ,, | 1 | ,, | 22 | ,, |
| ,, | ,, | $1\frac{1}{2}$ | ,, | 1 | ,, | 25 | ,, |

20. சுத்தப்படுத்திய இரும்பு குளா ஈயத்தால் பொருத்தி கயிறுசுத்தவேணும், செய்யப்பட்ட இரும்புகுளா இஸ்குறுப்பால் பொருத்தி ஈயக்குளாவுக்கு சோல்தினால் பொருத்தியுமிருக்கவேணும்.

21. நிரை அப்புறமிளுக்கும் குளா "ஸ்குறுப்டவுன்" யெங்கிற லகைப்பாயிருக்கும் அது அல்லாதபோனால் சங்கத்தவர்கள் ஒத்துக்கொள்ளப்பட்டபிறகு ஒரு வகையாலாகும்.

22. தண்ணீர் வேலையால் நீர் கொடுக்கும் நீர்பெட்டியில் நியமப்படுத்தும்வகையால் போளைஉள்ள நீர்குளா மூடுதலாயிருக்கும். போளைஉள் குளாமூடுகை சமைப்பது நீர்பெட்டியின் ஓரத்தால் 2 அங்குலம்பணிய தண்ணீர் வாத்து உடன் மூடிப்படக் கட்டியவிதத்திலாயிருக்கும்.

23. எப்பெட்டியிலும் நீர்கொடுக்கும் குளா பிலப்படுத்த வேண்டியது. நீர்பெட்டியில் நீர்மட்டத்துக்கு மேல்படவாயிருக்கும்.

24. பிறத்திக்குகலாவும் குளா எப்பெட்டியிலும் வீட்டின் பிறப்படுத்திவைக்க வேண்டியது. ஒளுகுதல்களை பாத்துபிடிக்கக்கூடிய விதமாய் வீட்டில் பிறத்தியில் நல்லாகத் தோத்திரமாகும் தலத்திலாயிருக்கும். இச்சொல்லப்பட்ட கருமத்தினாலும் காணுக்காவது மொளுகும் காமறுக்குளிகளுக்காஆவது சுகாதார உதவிக்காவது தொடுக்க கூடாது. எல்லா நீர்பெட்டிக்கும் வெவ்வேறாக ஒவ்வொன்றுக்கு பிறத்திக்குகலாவும் குளாவைக்க வேணும்.

25. சங்கத்தார் ஒத்துக்கொள்ளப்பட்ட வீதி வீணாகுதல் தடைபண்ணும் கழுவும் தாங்கி எல்லா நீர்காமறையில் பிலப்படுத்தக்கூடியது. எக்கருமத்தைப்பற்றியாவது நீர்கொடுக்கும் குளாக்குள் ஜலமல தலங்களுக்கு சேர்கக்கூடாது. இவ் எல்லாக் கருமத்திலும் நீர்பெட்டி அல்லது தாங்கியால் கெட்டதண்ணீர் தண்ணீர்கொடுக்கும் குளாவுக்காவது வீதிக் குளாக்களுக்கு வராதபடியாயிருக்கவேண்டியது.

26. பிறத்திக்கு தண்ணீர்கலாவும் குளாவின் கருணி தோத்திரமாகும் தலத்தில் நீர்ஒழுகுதலை லேசாக கண்டுபிடிக்கக்கூடிய விதமாய் வைக்கவேணும், நீர்வகிரண்டுஉள்ள நீர்பெட்டிதாங்கிபோல்கொத்த எப்பாத்திரமும் உயர்ந்த நீர்மட்டத்துக்கு கீளாக வைக்கவேண்டியது.

27. நகரசங்கத்து பொதுக்கட்டளையில்லாமல் எந்த நீர்கொடுக்கும் குளாவுக்காவது பொய்லர்களுக்காவது நீர்விளையும் பாத்திரத்துக்காவது பிலப்படுத்துவது தடையாயிருக்கும்.

28. எல்லா முழுகும் தாங்கிக்கல்லது கழுவும் பாத்திரத்துக்கு நீர்விழும்வளி பிறப்படும் வளிக்கு வேறுக்க வேணும்.

29. போஜன உபயோகத்துக்கல்லாத கருமங்களுக்கு நீர்கொடுப்பது கணக்கின் பிரகாரமாகும் சங்கத்தவர் கருத்துப்படி அப்படி அல்லாதிருக்கவும் கூடும். யெங்கிலும் பொதுவாய் எவ்வேளையும் இக்கொடுத்தல் அளவு கணக்குப்படியேயாம்.

30. இதுங்கீள் காணப்படும் விதம் பூரணமாக அல்லது சொற்பமாக கொடுக்கப்படும் தண்ணீர் போஜன உபயோகத்துக்கல்லாத கருமங்களுக்கேயாம். அவையாகிறது :—

(1) நீர்பாவிக்கும் எந்தக் கருமத்துக்காகிலும் தொளில்களைபற்றியும்.

(2) ஒட்டலுக்கு சொந்த போடிங்வீட்டுக்கு மனிதர் தங்கும் தலங்களாகிய தலத்துக்கு.

(3) பிரசித்த தானங்களுக்கு.

(4) விப்பனவுக்காக அல்லது கூலிக்கு கொடுப்பதுக்கா குதிரை, ஆடு மாடு, மிருகசாதி, வண்டிகள் வைத்திருக்கும் தலத்துக்கு.

1896 ம் ௵ முதலாம் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பால்கறப்பதெர்க்கு பதிவுபண்ணிய தலம் இக்கட்டளைச்சட்டத்தின் ஓராம் வகுப்பின் கருத்துக்கு உளராகாமல் நீங்கப்படும். ஒருவேளை இத்தலம் பதிவு பண்ணிய பால்கறக்கும் தலமாக இருந்தால் அல்லாமல் அத்தலம் வேறு கருத்துக்கு அனுபோவிப்பதை சங்கத்தாருக் கறியவந்தால் இவ்விடுதலை நியாயமாகும்.

31. வாடை கொடா அல்லது அதைப்பத்தி நியமப்படுத்திய முதல் கொடுக்கும் தலத்துக்கு 1,000 கலத்துக்கு ரூபா 1 வீதம் அளப்பினால் நீர்கொடுப்பதுக்கு சங்கத்துக்கு தப்புக்கிடமிருக்கும். இன்னும் இப்போதைக்குள் உரிமை விசேர் உரித்துக்கு மாத்தமாக்கா, அளவு இல்லாமல் அவர்களுடன் கட்டுப்பட்டால் நீர்கொடுக்கப்படும்.

32. அளவிடுகை பிலப்படுத்தாமல் இதின்கீள் காட்டப்படும் கருத்துப்படி போகும் தண்ணீருக்கு இதில் குறிக்கப்படும் சிலவு சங்கத்தவருக்கு கொடுக்கவேண்டும் :—

| | ¼ வருஷத்துக்கு. | | 1 வருஷத்துக்கு. | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| (1) தோப்புகளுக்கு முத்தங்களுக்கு நீர்போட ஒரு அக்கருக்கு அல்லது அதின் கீள் .. .. .. | 4 | 50 | 18 | 0 |
| (2) விப்பினைக்காக அல்லது கூலிக்கு கொடுக்க ஆடுமாடு குதிரைவண்டிகள் வைத்திருக்கும் தானத்துக்கு நீர்கொடுக்க :— | | | | |
| கரத்தை அல்லது சூஸ்திர மொடொ வண்டிஉக்கு .. .. | | | 0 | 67 |
| றிக்சொ வண்டி உக்கு .. .. .. .. | | | 0 | 21 |
| குதிரை ஒன்றுக் கல்லது கோவேறு கழுதைக்கு.. .. .. | | | 0 | 84 |
| கழுதை ஒன்றுக்கு .. .. .. .. | | | 0 | 38 |
| மாடு ஒன்றுக்கு .. .. .. .. | | | 0 | 34 |
| வக்கி கரத்தை ஒன்றுக்கு .. .. .. .. | | | 0 | 21 |

(3) இதில் குறிக்கப்படாவிப்பதுக் கல்லது கூலிக்கு கொடுக்கவைத்திருக்கும் குதிரை மாடு வண்டில் ஆகியவைகளுக்கு ஏர்ப்பாடாக்கிய விதம் சங்கத்தாரால் நியமப்படுத்திக் கொடுக்கப்படும்.

(4) கட்டுமானங்கள் கட்டிக்கொண்டுவரும் தலங்களின் வேலைஆள் ஒருவனுக்கு மாத்தைக்கு சதம் 25.

(5) சோத்துக்கடை பாம்வீடு அல்லது போர்ஜனவிசயத்துக் கல்லாது தண்ணீர் பாவினைபண்ணும் தலங்களுக்கு அத்தலத்தில் பாவினைபண்ணும் பிரமானப்படி சங்கத்தாரால் கணக்கு நியமிக்கப்படும்.

(6) பிரசித்த முழுகும் தலங்களுக்கு நீர் கொடுத்தல் அங்குள்ள ஒரு வாளிக்கு (வாளி ஒன்றுக்கு 80 கலனுக்கு அதிகப்படா இருக்க) ஒரு குவாட்டருக்கு ரூபா 14.

33. சொந்த போற்டின் வீட்டுக்கு அங்குள்ள ஒவ்வொருவனுக்கு மாசத்துக்கு சதம் 50 கொடுத்தால் தண்ணீர் கொடுக்கப்படும்.

34. போஜனவிசயத்துக் கல்லாத விசேஷ பிலப்படுத்துகை, கட்டுமான உதவுதலாகியவை (காணியின், குளா தடாகம், காணி பைப்புபோல்கொத்தவை) நீர்பாச்சுவெதர்க்காக கொடுத்தால் வீடுடையவன் அல்லது குடியிருப்பவன் மாறி பிறஒருவர் வந்தால் அவன் கொடுக்கும்படியும் ஏர்ப்படுத்தல் வேணும். அப்படி அல்லாவிட்டால் வீடுடையவன் சிலவில் அங்கத்தவர் ஒத்துக்கொள்ளும் விதத்துக்கு கொண்டுவந்து தரும்படி பிலப்படுத்துகை, கட்டுமானமாகியவைகளை ஒளிவிப்பது தகும்.

35. நீர்அளவு ஏந்திரம் சங்கத்தவர் கொடுத்து அங்கத்தவர் அத்தலத்தில் பிலப்படுத்த வேண்டும், அது சங்கத்தவர் சொத்து.

36. நீர்கொடுத்தலை பெத்துக்கொள்ளும் வீடுடையவன் அல்லது குடியிருப்பவனால் பிலப்படுத்தும் அந்த வேலைகளுக்கு சாமான்களுக்கு (அளப்பு தவிர) போகும்சிலவு முற்பணமாக கொடுக்கவேணும்.

37. எல்லா அளவுகளும் சங்கத்தவர் சிலவால் வைக்கப்படும். வேண்டுதலாய் அல்லது கவனயீனமாய் உண்டாகும் சேதத்தைவிட வேறு செய்யப்படும் புதுப்பித்தல்பண்ண சங்கத்தவர் சிலவால் செய்து கொடுக்கப்படும் எங்கிலும் வேண்டுதலாய் கவனயீனமாய் சேதப்படும் புதுப்பித்தலில் சிலவு வீடுடையவன் அல்லது வாடகை கொடுப்பவன் கொடுக்க வேணும்.

38. அளவு பாவிப்பதில் குவாடருக்கு அல்லது அதின் பாகத்துக்கு இதில் குறிக்கப்படும் வாடை கொடுக்கவேணும். இக்குவாட்டர் துவங்குறது தைமாதம் 1 ந் திகதி சித்திரைமாதம் 1 ந் திகதி ஆடிமாதம் 1 ந் திகதி அற்பிசைமாதம் 1 ந் திகதியாலுமாகும் :—

| | | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|---|
| 3 | அங்குல அளவு | குவாட்டருக்கு | அல்லது சொச்சத்துக்கு | .. | 33 | 50 |
